**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

OS.No.909/2023 பெயர் : வளர்மதி நாள் : 19.08.2025

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா. 2: 1 முதல் 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நீதிமன்றத்திலிருந்து எனக்கு சாட்சி சொல்ல ஒரு மாதத்திற்கு முன்பு அழைப்பாணை வந்தது. எனக்கு பூர்வீகம் நஞ்சனாபுரம். எனது நிரந்தர முகவரி நஞ்சனாபுரம் ஆகும். என்னுடைய கணவர் ஊர் நஞ்சனாபுரம். அவர் விவசாயம் செய்து வருகிறார். நஞ்சனாபுரம் கிராமத்தில் எனது கணவருக்கு சொந்தமாக பூமி உள்ளது. வாதி எனக்கு தூரத்து பங்காளி உறவு முறை ஆவார். வாதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜரான சமயத்தில் நானும் அவருடன் வந்திருக்கிறேன். வாதியின் தகப்பனார் 5-ம் பிரதிவாதி கதிரம்பட்டி, நஞ்சனாபுரத்தில் NTS கட்டுமான நிறுவனம் நடத்தி வருகிறார். 5-ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் 5 வருடங்களாக நான் பணியாற்றி வந்தேன் என்றால், சரியல்ல, 6 மாதங்கள் பணியாற்றினேன். அந்த அலுவலகத்தில் என்னுடைய உறவினரான சின்னசாமியும் பணியாற்றி வந்தார் என்றால், அவர் எனக்கு உறவினர் இல்லை, ஆனால் பணியாற்றி வந்தார். பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சின்னதம்பி என்பவரின் தகப்பனார் மற்றும் தாயார் பெயர் தெரியுமா என்றால், தெரியாது. அவர்கள் எப்போது இறந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. சின்னதம்பி உடன் பிறந்த சகோதர, சகோதரிகளின் பெயர் தெரியுமா என்றால், தெரியாது. சின்னதம்பிக்கு ஆதியில் எந்தெந்த கிராமத்தில், எந்தெந்த சொத்துக்கள், எந்தெந்த பத்திரத்தின் வாயிலாக பாத்தியப் பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். தாவா சொத்து சின்னதம்பிக்கு

எந்த வருட, எந்த பத்திரத்தின் வாயிலாக அவருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். அவருடைய குடும்பத்திற்குள் பாகப்பிரிவினை செய்துக் கொண்டார்களா என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். சின்னதம்பி எந்த தேதியில் இறந்தார் என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால், சரிதான். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கும் செட்டில்மெண்ட் பத்திரம் யார், யாருக்கு என்னென்ன சொத்துக்களுக்கு, எந்தெந்த பத்திரத்தின் வாயிலாக பாத்தியப்பட்டது என்று கூறமுடியாது என்றால், சரிதான். அதேபோல் பரிவர்த்தனைப் பத்திரமும் எந்தெந்த தேதியில் யார், யார் பரிவர்த்தனை செய்துக் கொண்டார்கள், என்னென்ன சொத்துக்களை எவ்வாறு பரிவர்த்தனை செய்துக் கொண்டார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால், சரிதான். வாதி பள்ளி மற்றும் கல்லூரி எங்கு படித்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. அவருடைய பள்ளி மற்றும் கல்லூரி படித்த காலத்தில் வாதியின் தகப்பனார் 5-ம் பிரதிவாதி கார்டியனாக இருந்து கையொப்பம் செய்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். வாதிக்கு நிரந்தர முகவரியாக ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, பள்ளி மற்றும் கல்லூரி சான்றிதழ் மற்றும் குடும்ப அட்டை அனைத்திலும் எந்த விலாசம் குறிப்பிட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. சாதாரணமாக தாத்தா, பாட்டி வீட்டிற்கு பேரனோ, பேத்தியோ போய்வருவது இயல்பு என்றால், சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள குழந்தையம்மாள், வாரணாசி கவுண்டர் ஆகியோர் எனக்கு உறவினர் அல்ல என்றால், சரிதான். 5-ம் பிரதிவாதி யார் யாரிடம் கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்கு

தெரியுமா என்றால், தெரியாது. தாவா சொத்தை 5-ம் பிரதிவாதி 1 முதல் 4 பிரதிவாதி களுக்கு கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்று சொன்னால், சரிதான். 5-ம் பிரதிவாதி செல்வராஜ் இந்த வழக்கை நடத்தி வருகிறார் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால், தெரியாது. 5-ம் பிரதிவாதியிடம் நான் சில மாதங்கள் வேலை செய்து வந்ததால், அவர் பெண்ணை வைத்து அவர் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல,.